**திஹகொட பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திஹகொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திஹகொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுூம உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் தன்மையில் காணப்படாத ரூபா 83,160 தொகை பெறுமதியான 08 பொருட்பதிவேட்டு பண்ட விடயங்கள் , தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய ரூபா 103,040 தொகை செலவுகளுக்காக பல்வேறு கடன்கொடுத்தோரின் கீழும் 09 | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,991,188 தொகை மூலதனக் கடன்கொடுத்தோரின் கீழும் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) | உடுவ கிழக்கு எல்லன்துடுவ துணைப் பாதை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக செலுத்த வேண்டிய ரூபா 712,745 தொகை குறைவாக மூலதனக் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 27 அறிவித்தல் பலகைகளுக்காக பெற வேண்டிய ரூபா 119,513 தொகை பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 89,041 தொகை மற்றும் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 895,907 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பௌதீக ரீதியாக மீதியொன்று காணப்படாத போதிலும் 40 இருப்பு விடயங்கள் தொடர்பான பெறுமதி ரூபா 540,894 தொகை நுகர்வுப் பண்டங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 133,919 தொகை, பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 9,878,182 தொகை மற்றும் முத்திரைக் கட்டண சிட்டையிடல் ரூபா 138,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட 02 கணக்கு விடய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 1,127,360 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 14,005,055 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 3,366,126 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,271,767 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 3,435,057 | 3,148,844 | 1,612,550 | 3,668,471 | 3,357,280 | 3,203,501 | 1,345,269 | 2,132,177 |
| ii. | வாடகை | 3,625,000 | 2,766,977 | 2,855,192 | 76,488 | 4,425,000 | 1,984,905 | 2,010,530 | 164,703 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,858,000 | 2,110,357 | 2,114,157 | - | 1,833,000 | 1,791,250 | 1,798,650 | 3,800 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 9,339,000 | 22,424,369 | 22,457,717 | 152,435 | 9,424,000 | 2,239,041 | 2,310,434 | 185,783 |
| | மொத்தம் | 18,257,057 | 30,450,547 | 29,039,616 | 3,897,394 | 19,039,280 | 9,218,697 | 7,464,883 | 2.486.463 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2620 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 3,661,264 இற்கான மீதி மற்றும் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் முத்திரைக் கட்டணம் ரூபா 3,796,473 தொகை பெற வேண்டிக் காணப்பட்டது. | 2024 மே 05 ஆந் திகதி அளவில் நிலுவை வீதவரி ரூபா 375,847 இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும் பிரதான செயலாளரின் இலக்கம் CSS/8/4/1(iii) மற்றும் 2024.01.03 திகதிய கடிதத்தின் மூலம் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண மீதி அறிவிக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உக்கக் கூடிய குப்பைகளில் இருந்து சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உக்காத மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக நிரந்தர மற்றும் முறையான வேலைத் திட்டமொன்று காணப்படாமையால் தனியார் காணி ஒன்றில் அப்புறப்படுத்தி மண்ணினால் மூடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உக்காத குப்பைகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாத்தறை மாவட்ட அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளரின் இலக்கம் SU/MR/PTI/SZ/B26/2011/2016 மற்றும் 2021 பெப்ரவரி 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரை செயற்படுத்தப்பட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2022 திசெம்பர் 15 ஆந் திகதிய 2022/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபைக்கு இணைய தளமொன்று நிர்மாணிப்பதற்காக 2023 ஒக்தோபர் 10 திகதி ரூபா 35,000 இற்கான முற்பணம் ஒன்று நிறுவனம் ஒன்றுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 179 இற்கு இணங்க சபையினால் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் நிறைவேற்றப்பட வேண்டிய சேவை மற்றும் நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கை ஒன்றுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் பிரதேச சபை மூலம் பொது மக்களுக்கு மேற்கொள்ளப்படும் சேவைகள் நிகழ்வு நிலையின் கீழ் பொதுமக்களுக்கு வழங்குதல் இந்த செயற்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த இணைய தளம் நிகழ்வு நிலை மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளும் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2021 ஜுலை 08 திகதிய இலக்கம் 2235/54 கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள்/ பிரமாணங்கள் இணங்காத முறையில் மற்றும் கட்டிட எல்லைகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே இனங்கண்டு கட்டணம் அறவீடு செய்து அவ்வாறு மேற்கொள்ள முடியாவிடின் நிர்மாண வேலை பூர்த்தி செய்வதற்கு முன்னர் அவை தொடர்பாக நடவடிக்கை எடுத்து அகற்றுவதற்கு செய்முறையொன்று சபையினால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான நகர எல்லையினுள் அமைந்துள்ள காணியொன்று துணை பகிர்வு மேற்கொள்ளும் போது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்காத போதிலும் முறைசாரா விதமாக துணைப் பகிர்வுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு காணி 2021 ஜூலை 08 திகதிய இலக்கம் 2235/54 கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரிவுகள் 27(1)(2) ஏற்பாடுகளுக்கு புறம்பாக துணைப் பகிர்வுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | தனிப்பட்ட காணி துணைப் பகிர்வு எனவும் தற்போது பாதை முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நகர எல்லையுள் துண்டுகளாக பகிரப்பட்டு ஏல விற்பனை செய்யப்பட்டிருந்த 3ரூட் 35.10 பர்சஸ் தொகையான காணியின் உண்மையான விற்பனை பெறுமதியை கண்டறிந்து 1 சதவீத நிலுவைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | விரைவாக கட்டணம் அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | நகர் அல்லாத எல்லையை சேர்ந்த 2 காணிகள் பகிரப்பட்டு விற்பனை செய்வதற்காக காணி ஏலவிற்பனை செய்யும் கம்பனி ஒன்றினால் காணி துணைப்பகிர்வு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், காணிகளை துணை பகிர்வை அங்கீகரிக்கும் போது அவ்வாறு அபிவிருத்தி செய்வதல் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் அடங்கிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரமொன்று வழங்கி குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவா என உறுதிப்படுத்திக் கொள்ளாமல் துணைப்பகிர்வு வரைபுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 23 திகதி கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்திலும் ஒரு காணியின் விளம்பர அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு காணித் துண்டுகளின் விற்பனை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், துண்டுகளின் விற்பனை பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி அல்லது விற்பனை செய்யப்பட்ட துண்டுகள் உள்ளவாறான விற்பனை பெறுமதி மீது ஒரு சதவீதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | ஒரு காணியில் இருந்து ஒரு சதவீதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது எனவும் பெறுமதி மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும். | நிபந்தனைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜூலை 08 ஆந் | குறிப்பிட்ட நிறுவனங்களை தொடர்புகொண்டு கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டதுடன் | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதிய இலக்கம் 2235/54 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 28(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர எல்லையினுள் (2022 ஒக்தோபர் 19 திகதிய இலக்கம் 2302/20 அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திஹகொட பிரதேச சபைக்கு சொந்தமான அதிகார பிரதேசத்தில் நகர அதிகாரப் பிரதேசம் என வெளியிடுவதற்கு முன்னர்) நிர்மாணிக்கப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 09 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்காததுடன் மேலும் அந்த நிர்மாணவேலைகள் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளுக்கு இணக்கமின்றி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிக்கள பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றும் ஆரம்பதர 08 தொழிலாளர்களுக்கு அவர்களின் பதவிக்குரிய கடமைகள் சாட்டப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,296,622 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்னர் அந்த தவறு சரி செய்யப்படும் என. | பதவிக்கு உரிய கடமைகளில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். |